**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.356 /2024 நாள்- 27.03.2026

சா.சா.1

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்-கண்ணன் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் DBS வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்களது வங்கி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. ஆதியில் லட்சுமிவிலாஸ் வங்கி இந்திய அரசு நடவடிக்கையின் படி எங்கள் வங்கியால் கையகப்படுத்தப்பட்டு எங்கள் வங்கி பெயரில் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீவிநாயகா டிரேடர்ஸ் பெயரில் எங்கள் வங்கியில் வைப்பீடு பத்திரம் தான் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆகும். வைப்பீடு தொகை எங்களது வங்கியில் தான் இருக்கிறது என்றால் 2005ம் ஆண்டு முழுமையடைந்துவிட்டதால் என்னால் கூறமுடியாது. ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் நிறுவனம் 35 வருடங்களுக்கு முன்பாக லட்சுமி விலாஸ் பேங்க்காக இருந்த போது தொடங்கப்பட்ட வங்கி கணக்காகும் எங்கள் வங்கியால் லட்சுமி வங்கியால் கையகப்படுத்தப்பட்டதால் மேற்படி ஆவணங்கள் எங்கள் வங்கியில்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

கைவசம் இல்லை. எங்கள் வங்கி கணினி பதிவேடுகளில் அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள நடப்பு கணக்கு எண். 060235100000109 ஆகும். மேற்படி நடப்பு கணக்கு எண்.060235100000109 எங்கள் பதிவேடுகளின் படி தனிநபர் நிறுவனமாக காட்டப்பட்டுள்ளது. தனிநபர் மட்டுமே கையொப்பம் செய்துள்ளதாக எங்கள் கணினி பதிவேடுகளில் காட்டப்படுகிறது. 24.11.2018 அன்று ரூ.159383.86/- 10 வருடங்களுக்கு மேலாக வரவு செலவு இல்லை என்பதால் மேற்படி தொகை ரிசர்வ் வங்கிக்கு விதிமுறைகளின்படி அனுப்பப்பட்டுவிட்டது. **கணினி பதிவிறக்க நகல் சா.சா.ஆ.1-** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

ஸ்ரீவிநாயகா டிரேடர்ஸ் தனிநபர் நிறுவனத்தின் உரிமையாளர் ஜகநாதராஜா என்று கேட்டால் இந்த வங்கி கணக்கில் உள்ள கையொப்பத்தை வேறு சேமிப்பு கணக்கில் ஒப்பீட்டு பார்த்த போது ஜகநாதராஜா பெயரில் உள்ளது. பொதுவாக தனிநபர் நிறுவன கணக்கு ஆரம்பிப்பதற்கு அந்த தனிநபர் பெயரில் நிறுவனத்தின் பெயரில் வங்கி கணக்கு தொடங்கப்படும் என்றால் முன்பு அவ்வாறு இருந்தது தற்போது GST போன்ற அரசு ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும். ஸ்ரீவிநாயகா டிரேடர்ஸ்-ன் விண்ணப்பம் மற்ற ஆவணங்கள் எங்கள் வங்கியில் இருக்கிறது என்றும் மேற்படி ஆவணங்களை வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.